## சார்பு நீதிமன்றம், செஞ்சி

**அ.வ.எண்.166/2021** **நாள்.17.02.2025**

2025-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 17-ம் நாள் பிரதிவாதி தரப்பு **1ம்** சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கிருஷ்ணன் | தொழில் | |
| த.பெ/க.பெ. | அர்ஜீனன் | சாதி | |
| கிராமம் | கலியூர் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 92 |

**பி.சா.1**

**குறுக்கு விசாரணை**

என் சகோதரர் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியும். நான் என் பிள்ளைகள் பேரில் செட்டில்மெண்ட் எழுதியபிறகு தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். வீட்டு மனை மட்டும் தான் இவ்வழக்கில் உள்ளது அது நத்தம் என்றால் சரிதான். நான் பூர்வீகமாக அதில் தான் வசித்துவருகிறோம் என்றால் சரிதான். ஆகவே உங்கள் தகப்பனார் காலத்திலிருந்து வரும் பூர்வீக சொத்து என்றால் பூர்வீக சொத்துதான் அதற்கு என் அப்பா பேரில் பட்டா இல்லை. அப்போது கிராம நத்தத்தில் விஸ்தீரணத்தில் நிறைய பேர் குடும்பம் இருந்தார்கள் என்றால் சரிதான். 1986ல் தான் எல்லோருக்கும் பட்டா கொடுத்தார்கள் அப்போது தான் எனக்கும் கொடுத்தார்கள். எனக்கு பட்டா கொடுத்த சமயத்தில் ஒரே ஒரு கூரைவீடு தான் இருந்தது என்றால் சரிதான்.

அந்த ஒருவீட்டில் தான் நான், என் சகோதரர் எல்லாம் வசித்துவந்தோம் என்றால் சரிதான். அந்த இடம் 2 சர்வே எண்ணில் வருகிறது என்றால் சரிதான். ஒரு சர்வே எண்ணில் 176 ச.மீ மற்றொரு சர்வே எணணில் 166 ச.மீ என்றால் சரிதான். நான், என் தகப்பனார் வசித்த வீடு எல்லாம் சேதமாகிவிட்டது அதேஇடத்தில் கூரைவீடு கட்டினேன். நான் கூரைவீடு கட்டிய போது எனக்கம், என் சகோதரருக்கும் பாகம் பிரியவில்லை என்றால் நிலங்களை 1976ல் பாகம்பிரித்துகொண்டோம். மனையை பிரிக்கவில்லை. அதன்பிறகு கூரைவீடு கட்டினேன். என் சகோதரருக்கு நான் 1969ல் நான் வேலைவாங்கிகொடுத்தேன். அவருக்கு 1975ல் திருமணம் செய்துவைத்தேன். திருமணத்திற்கு பிறகு என் சகோதரர் திண்டிவனத்தில் இடம் வாங்கி வீடுகட்டினார் என்றால் சரிதான்.

என் தகப்பனார் காலமான பிறகு என் பேரில் பட்டா வாங்கினேன் என்றால் சரிதான். என் தாத்தா பெயர் பெருமாள் கவுண்டர். என் தாத்தாவும் அதே கூரை வீட்டில் தான் வசித்துவந்தார். என் தாத்தா பேரிலும் பட்டா இல்லை. அவர் நத்தம் இடத்தை மட்டும் அனுபவித்து வந்தனர். வழக்கு சொத்து கிரையம் வாங்கவில்லை அரசாங்கம் எனக்கு பட்டா கொடுத்தது. 2014ல் அரசு இலவச வீடு வழங்கப்பட்டது.

அதன்பிறகு தான் இலவசவீடு கட்டினேன். மனையின் மொத்த இடத்தில் மேற்கு பகுதியில் தான் அந்த வீடு கட்டியுள்ளீர்கள் என்றால் நான் 166 ச.மீ வீடு கட்டியுள்ளேன். 176 ச.மீ காலியாக உள்ளது. காலியாக உள்ள இடம் மேற்கே உள்ளது.

என் சகோதரர் பாகத்தை விட்டுவிட்டு தான் வீடு கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. 1986ல் பட்டா எனக்கு வழங்கப்பட்டுள்ளது. என் தாத்தா, அப்பா இருந்த இடத்தை தவிர வேறு எந்த புறம்போக்கு இடத்தையும் நான் அனுபவம் செய்யவில்லை. என் பேரில் பட்டா வந்ததால் என்னுடைய சொத்து என்றால் சரிதான். தாத்தா அனுபவித்து, என் தந்தை அனுபவித்து அதன்பிறகு நான் அனுபவித்து வருகிறேன் என்றால் சரிதான். என் தம்பி திண்டிவனத்தில் வசித்து வந்ததால், என் பேருக்கு பட்டா வழங்கப்பட்டது. பூர்வீக வீட்டிலிருந்து தான் அவர் சென்றாரா என்றால் ஆமாம். இலவச வீட்டிற்காக எனக்கு ஆவணம் கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா என்றால் இல்லை. வீடு கட்ட கொடுத்த ரெக்கார்டில் 166 ச.மீ என உள்ளது. அரசாங்கம் 2 1/'2 செண்டிற்கு தான் வீடு கட்ட ஆவணம் கொடுத்தார்கள் என்பதால் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

வீட்டுமனையை பொறுத்து என் சகோதரர் எந்த பாகபாத்திய விடுதலை பத்திரம் எதுவும் எழுதிகொடுத்தாரா என்றால் இல்லை. நிலங்களையும் வாய்மொழியாகத்தான் பாகம் பிரித்தோம் என்றால் சரிதான். நான் அவருக்கு பாகம் கொடுக்ககூடாது என்பதற்காகத்தான் நானும், என் பிள்ளைகளும் சேர்ந்து பாகம் பிரித்துகொண்டோம் என்றால் சரியல்ல. பட்டா வந்தபிறகு தான் எழுதிகொண்டோம். இது பூர்வீக சொத்து என்பதால் உங்கள் பேரில் பட்டா இருந்தாலும் உரிமை கொள்ள முடியாது என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வாதி நோட்டீஸ் அனுப்பியதை வாங்கிகொண்டீர்களா என்றால் வாங்கிகொண்டேன். அதற்கு பதில் அறிவிப்பு கொடுத்தீர்களா என்றால் இல்லை. நீங்களும் வாதியின் பாகத்தையும் எடுத்துகொள்வதற்காக பொய்யாக வழக்காடுகிறீர்கள் என்றால் சரியல்ல.

(என்னுடைய நிருபண வாக்குமூலத்தையும் ஆவணங்களையும் ஏற்று தாவாப்படி தீர்ப்பளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்).